//தகவல் அறியும் உரிமைச் சட்டம்–2005//

அனுப்புநர்
பொதுத் தகவல் அலுவலர் / பள்ளிக் கல்வி
துணை இயக்குநர் (மின் ஆளுமை),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை–6

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக்
கல்வி அலுவலர்கள்.

**ஓ.மு.எண் : 022998/எம்/இ1/2023** **நாள் : 08 .05.2023**

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் தகவல்கள் கோரியது– தகவல் அறியும் உரிமைச் சட்டம்,2005, பிரிவு 6(3)–ன் கீழ் மாற்றம் செய்தல் குறித்து.

பார்வை : தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திரு.ம.அபினாஷ், சென்னை என்பாரின் மனு நாள். 24.04.2023.

*******

பார்வையில் காணும் தகவல்கள் கோரும் மனுவின் அசல் நகல், தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(3)–ன் கீழ் மாற்றம் செய்து இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனுதாரர் கோரிய தகவல்களை அளித்துவிட்டு அதன் நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மை க்கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வையில் காணும் மனு.

**பொதுத் தகவல் அலுவலர் /**
**பள்ளிக் கல்வி துணை இயக்குநர் (மின் ஆளுமை)**

8/5/2023

நகல்.
ம.அபினாஷ் த/பெ. ஏ.மனோகரன்,
300/183, 3–வது தளம்,
தம்பு தெரு, சென்னை–600 001.

**தகவல் அறியும் உரிமை சட்டம் 2005, பிரிவு 6 (1)-**
**இன் படி தகவல் கோரும் மனு**

24.04.2023

22998
02-5-23




அனுப்புநர்:

ம.அபினாஷ்
தா/பெ. ஏ.மனோகரன்
300/183, 3-வது தளம்
தம்பு தெரு, சென்னை-600 001.

பெறுநர்:

பொது தகவல் அலுவலர்
பள்ளி கல்வித்துறை
DPI வளாகம்
சென்னை.600 006.

2 6 APR 2023
சென்னை-06

மதிப்பிற்குரிய அம்மா/ அய்யா

பொருள்: பள்ளி கல்வியில் திருநங்கைகளுக்கான உரிமைகளை பற்றிய தகவல்களை அளிக்க கோருவது- தொடர்பாக.

**கோரப்பட்டுள்ள கீழ்க்காணும் தகவல்களை தெளிவாகவும் புள்ளி விவரங்களுடன் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்:**

1. பள்ளிகல்வியில் திருநங்கைகளுக்கு இட ஒதுக்கீட்டு வழங்கப்பட்டுள்ளதா உள்ளது என்றால் எவ்வளவு சதவீதம் வழங்கப்பட்டுள்ளது என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. பள்ளி கல்வியில் திருநங்கைகளுக்கு சிறப்பு திட்டங்கள் மற்றும் சலுகைகள் ஏதேனும் வழங்கப்பட்டு உள்ளதா என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. பள்ளி கல்வியில் திருநங்கைகளுக்கு சிறப்பு திட்டங்கள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டு உள்ளது என்றால் என்ன திட்டங்கள் மற்றும் சலுகைகள் என்பதினை உரிய ஆவணங்களுடன் தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

...2...

4. தமிழ்நாடு முழுவதும் பள்ளிக் கல்வியை எத்தனை திருநங்கைகள் தற்போது வரை பயின்று வருகிறார் என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. மாவட்ட ரீதியாக எத்தனை திருநங்கைகள் பள்ளிக் கல்வியை தற்போது வரை பயின்று வருகின்றனர் என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6. தமிழ்நாடு முழுவதும் கடந்த 2012 முதல் 2022 வரை எத்தனை திருநங்கைகள் பள்ளிக்கல்வியை பயின்றனர் என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7. மாவட்ட ரீதியாக கடந்த 2012 முதல் 2022 வரை எத்தனை திருநங்கைகள் பள்ளிக்கல்வியை பயின்றனர் என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

8. தமிழ்நாடு முழுவதும் கடந்த 2012 முதல் 2022 வரை எத்தனை திருநங்கைகள் பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு உயர்கல்விக்கு சென்றனர் என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9. திருநங்கைகள் கல்வி உரிமை சட்டத்தின் கீழ் கல்வி கற்க முடியுமா என்பதை தகவலாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் தகவல் அறியும் உரிமை சட்டதில் உள்ளபடி ரூ.10/- க்கான நீதிமன்ற வில்லை இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளேன். மேற்க்கூறியுள்ள தகவல்கள்/ ஆவணங்கள் அவசரமாக தேவைப்படுகிறது அத்தகவல்களை விரைவில் எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

(ம.அபினாஷ்)